திருத்தணி முருகன் கோவில் முன்னாள் அறங்காவலர்
செங்குந்தர் குல எச்சான் கூட்டம்

மின்னல்

திரு. ப.மு.செங்கழனி முதலியார்

அவர்கள்

நினைவு மலர்



தோற்றம்:-
13.09.1904

மறைவு:-
20.01.1958

செங்குந்தர் வரலாறு மீட்பு குழு
78269 80901

முருகப் பெருமானின் போர்ப்படைத் தளபதிகள்
வீரபாகு உள்ளிட்ட செங்குந்த கைக்கோள நவவீரர்கள்



வீரதீர செங்குந்தர் வீராந்தக செங்குந்தர் வீரமார்த்தாண்ட செங்குந்தர் வீரராக்கத செங்குந்தர் வீரபாகு செங்குந்தர் வீரகேசரி செங்குந்தர் வீரமகேந்திர செங்குந்தர் வீரமகேசுவர செங்குந்தர் வீரபுரந்தக செங்குந்தர்

செங்குந்தர் வரலாறு மீட்பு குழு

78269 80901

website: https://senguntharmudaliarhistory.blogspot.com/


முதலியார் அவர்கள் முதல் துணைவியார்

திருமதி.சின்னகண்ணம்மாள் உடன்



முதலியார் அவர்கள் இரண்டாம் வாழ்க்கை துணைவியார்

திருமதி.மீனாட்சியம்மாள் உடன்



ஓம்:

மின்னல்

திரு.ப.மு.செங்கழுனி முதலியார்

அவர்கள்

நினைவு மலர்



வெளியிடுவோர்:

நினைவு மலர்க் குழுவினர்

மின்னல்

முன்னுரை:

மின்னல்,கழக உயர்நிலைப் பள்ளியின் தந்தை பெரியார் திரு.ப.மு.செங்கழனி முதலியார் அவர்கள் வடாற்காடு மாவட்டத்தில் பலரும் போற்றும் அருங்குணம் படைத்தவராய்த் திகழ்ந்தார், அவர், இப்பள்ளியைத் தோற்றுவித்து வளர்த்த கல்விப் பணியும், திருத்தணிகை முருகர் கோயில் கோபுரங் கட்டுவித்தும், தணிகை தேவஸ்தானக் குழு உறுப்பினராக இருந்தும் ஆற்றிய தெய்வப் பணியும் என்றும் நிலைபேறுடையனவாகும். அப்பெரியார் ஏவிளம்பி ஆண்டு தைத் திங்கள் 7-ஆம் நாள் **(20-01-1958)** தம் பூதவுடலினின்றும் நீங்கிப் புகழுடம்பு எய்தித் திகழும் காட்சியினராயினார், அவரைப் பற்றி ஒரு நினைவு மலர் வெளியிட வேண்டும் என்று இவ்வூரிலும், வெளியிலும் உள்ள பலரின் விருப்பப்படி இம்மலர் வெளிவருகின்றது. எங்கள் வேண்டுகோளுக்கிணங்கி அப்பெரியாரைப் பற்றி தம் விழுமிய கருத்துரைகளை உரிய காலத்தில் வழங்கியருளிய பெருமக்கள் எல்லோருக்கும் எம் நன்றி உரியதாகும். தவிர, காலந் தாழ்த்தி வந்த கருத்துரைகளை வெளியிட முடியாமைக்கு மன்னிக்க வேண்டுகிறோம். இதன்கண் குற்றங்குறைகள் இருப்பின் பொறுத்தருள வேண்டுகிறோம்.

இங்ஙனம்

ப.வேதாத்திரிப்பிள்ளை

தலைமை ஆசிரியர்

தலைவர், நினைவு மலர்க்குழு

கழக உயர்நிலைப்பள்ளி, மின்னல்.

திரு.ப.மு.செங்கழனி முதலியாரவர்கள் வாழ்க்கை வரலாறு

"தோன்றிற் புகழொடு தோன்றுக"

தோற்றுவாய்:

உலகுய்ய அருளறம் கற்பித்த அறிவுலக மேதைகள் பலர் காட்டிய அடிச்சுவட்டைப் பின்பற்றிய புரவலர்கள், வள்ளல்கள் பலர் தோன்றிய நாடு நம் தண்டமிழ் நாடு, கணம் கணம் தோன்றிக் கணம் கணம் மறையும் உயரிர்கள் பல. இவரெலாம் பிறந்தார் என்று எண்ணவும் படார். பிறந்தார் என்போர் புகழுடன் சிறந்தோரே ஆவர். மலர்தலையுலகில் பொன்றாது என்றும் நிலைத்திருப்பது புகழாகும். இத்தகு இணையிலாப் பெரும்புகழ் எய்திய பெரியோர்களின் வரலாறுகள் ஏனையோர்க்கு எடுத்துக்காட்டாய்த் திகழ்வது இயல்பு. நல்லியல்பு வாய்ந்து மறைந்த வள்ளியோருள் ஈண்டுக் கூறப்படும் பெருந்தகையார் செங்கழனி முதலியாரும் ஒருவர் எனில் மிகையாகாது.

குடிப்பிறப்பும் குன்றாவளமும்:

தொண்டை நாட்டில் அரக்கோண (அறுகோண)த்தைச் சார்ந்த மின்னல் கிராமம் நெசவுத் தொழிலில் வளம்பெற்றதொன்றம், மாந்தர்தம் மானத்தைக் காக்கும் ஆடை நெய்தலையே தம் வாழ்வின் தொழிலெனக் கொண்டு வாழும் செங்குந்தர் குலத்தில் திருவுடைச் செல்வராய் வாழ்ந்து வருபவர் பட்டு. முத்தப்ப முதலியாராவர். இவருக்கு இவர்தம் முதல் வாழ்க்கைத் துணைவியார் வள்ளியம்மையாருக்கும் முதல் மகனாக 13-09-1904-ல் நம் செங்கழனி முதலியார் தோன்றினர். உலகில், குடிப்பிறப்பால் ஒருவர் உயர்வு அடைதல் இயல்பு. இதற்கு மாறாக, ஒருவர். பிறந்ததனால் அவர் தம், பண்பாட்டால்-தாம் பிறந்த குடிக்குப் பெருமையளித்தலும் உண்டு. நம் முதலியார் அவர்கள் பின்னர்க் கூறிய வகையினைச் சார்ந்தவர். முதலியார் தம் இன்னரும் குணநலத்தால் தாம் பிறந்த " பட்டுகான் வீடு " என்ற குடிப்பெயரை விளக்குமுறச் செய்தார் எனில் புகழுரையல்ல.

,இளமையிற் கல்வி சிலையில் எழுத்து, என்றபடி தக்க பருவத்திலேயே தொடக்கக் கல்வியில் தலைசிறந்து விளங்கி எண்ணையும் எழுத்தையும், ஏலுறப்பயின்றார். "குலவிச்சை கல்லாமல் பாகம் படும்" என்பதற்கிணங்க நெசவுக் கலையை நுனித்தறிந்தார்.

உடன்பிறப்பின் உறுதுணை:

நம் முதலியாருடன் தோன்றியவர் நால்வர், அவருள் திருவாளர்கள். முருகேச முதலியாரும், மாணிக்க முதலியாரும், **துரைசாமி முதலியாரும் பெரிய தாய்** என்ற தங்கையுமாவர். தோள்வலி தருபவர் உடன் பிறப்பினர். துணிவூட்டித் துணையிருப்பவரும் அவரேயாவர். இந்நால்வரும் உடன் பிறப்பு என்ற சொற்றொடரின் பொருள் விளங்க வாழ்பவர் எனில் கற்பனையல்ல. இந்நால்வரும் நடத்தும் குடும்பம் ஒரு சிறு அரசாங்கம் எனலாம். எத்துறையில் செல்லினும் இந் நால்வரின் கலந்த எண்ணமே ஒருங்கு திகழும். உடன் பிறப்பாளர் உடலுழைப்பின் உறுதுணை கொண்டு நம் முதலியார் அவர்கள் வணிகத் துறையில் துணிவுடனிறங்கி வளம்பல பெற்றார். உண்டி கொடுக்கும் உழவுத் தொழிலிலும் உலையாதுழைத்து ஊதியம் பெற்றனர். பொற்புடை ஆடைகள் பற்பல வகையில் விளைவித்து வணிகத் துறையில் அளவளவாக உயர்ந்து சென்னை, பம்பாய் சீரிய நல் கல்கத்தா அழகிய நகராம் அகமதாபாத் முதலிய அப்பால்பட்ட அரும்பெரு நகர்களின் கிளை நிலையங்கள் அமைத்துப் பிற நாடுகளுக்கு அனுப்பி வணிகத் துறையில் வளம் பல பெற்றார்.

திருமணமும் மக்கட்பேறும்:

" இல்லறமல்லது நல்லறமன்று " என்ற உண்மை விளங்க இல்லற நெறியில் நின்றே அறம்பொருள் இன்பம் வீடு என்ற நான்கினையும் பெறக்கூடும் என்பது தமிழர் கண்ட முடிவு. 1924 ஆம் ஆண்டு முதலியார் தமது இருபதாம் அகவையில் திருமதி. சின்ன கண்ணம்மாள் என்பவரைத் தம் இல்லக் கிழத்தியாக ஏற்றார். இல்வாழ்வான் என்பான் துறந்தார்க்கும் துவ்வாதவர்க்கும் ஏனையோர்க்கும் உண்டி முதலியன ஈந்து உறுதுணையாக இருப்பவன் ஆவான். இந்நெறியினை இடைவிடாது போற்றி மக்கள் நால்வரை ஈன்றனர். அவருள். திரு.நடேச முதலியார் என்பாரும். திருமதி. குப்பு அம்மாள் என்பாரும் முதலியாரின் அயல் நின்று பணியாற்றும் பேறு பெற்றவர்களாவர். முதல் மணமான பதினான்கு ஆண்டுகள் கழிந்த பின்னர்

முதலியார் அவர்கள் திருமதி. மீனாட்சி அம்மாளை இரண்டாம் வாழ்க்கைத் துணைவியாக ஏற்கும் வாய்ப்புற்றார். அறத்தின் வழிப்பட்டதே இல்வாழ்க்கை. அன்பின் அடித் தோன்றி அறமுணர்ந்து செய்யும் ஆற்றலுடையவர்களாய் இவ்விருவரும் எவ்வுயிர்க்கும் அன்பு காட்டி ஆதரவு தந்து இன்புற்றிருந்தனர். இவர் தம் இன்ப வாழ்வில் மலர்ந்த மக்கள் எண்மர். எனினும் உடனிருந்து வாழும் பேறு பெற்றவர்கள் **பெரியப்பா(எ) பொன்னம்பலம், சின்னப்பா (எ) லோகேஸ்வரன், பட்டு, பாலு என்ற ஆண்மக்களும், இராணி** என்ற சிறுமியுமே ஆவர். இங்ஙனம் மக்களும் ஒக்கலும் மாண்புறு பெயரும் சூழப் பெற்றவராய் முதலியாரவர்கள், அமைந்த வாழ்க்கை வாய்ந்தவராய் குடும்பத்தில் இடும்பை சிறிதும் குறுக்கிடாமல் அமைதியாய் ஓடும் ஆற்றினைப் போல் பலர்க்கும் பயன் தந்து நிறைந்த வாழ்வாற்றினார் என்பது குறிப்பிடத்தக்க தொன்றாம்.

திறமைக்கேற்ற தகுதிகள்:

பல துறைகளில் செல்லும் மாந்தரோடு பழகும் நல் வாய்ப்பை நல்கும் வணிகத் துறையில் வான் புகழடைந்துவரும் முதலியாரவர்களின் நேர்மையையும் நீதித் திறனையும் நடுநிலையினையும் அன்பின் மலர்ந்த புன்முறுவலையும் அறிந்த ஊர்ப் பெருமக்கள் 1947-ஆம் ஆண்டு முதலியாரை ஊர் பெரியதனக்காரராகவும் கிராமணியாகவும் வைத்துப் போற்றினர். இன் சொல்லாலன்றி இருநீர் வியனுலகம், வன்சொலால் என்றும் மகிழாதே- என்ற உண்மையை நன்குணர்ந்த முதலியார் நயம்படப் பேசி நலம் பல விளைக்கும் பேரன்பைக் கண்ட பாராஞ்சி வட்ட மக்கள் 1949-ஆம் ஆண்டில் இவரை வடார்க்காடு மாவட்ட கழக உறுப்பினராய்த் தேர்ந்தெடுத்து நலம் பல துய்த்தனர். நான்காண்டுகள் வரை கழக அங்கத்தினராக இருந்து தம் உடலாலும் பொருளாலும் உற்றுழி உதவி வந்துள்ளனர்.

ஆலயப்பணி

"கற்றதன லாயபய னென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்."

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியாம் கடவுளின் பாதத்தைச் சென்னியில் வைத்துச் சிறக்கப் பணிதல் கற்ற அறிவின் அறிகுறியாகும். அங்கு இங்கு எனாதபடி எங்கும் பிரகாசமாய் ஒளிரும் பேரோளியை யாண்டும் எப்போதேனும் தொழலாம். எனினும் கற்றளி கட்டி வழிபட்டனர் கருத்துடைத் தமிழர். காலை மாலைக் கடவுளைத் தொழு என்று திட்டமிட்டு வழிபாடியற்றினர் பலர். இம்முறையில்யாண்டுமுள ஆண்டவனை ஆ+லயம் அமைத்து வணங்குவது இயல்பாயுள்ளது. ஆ+லயம்→ஆன்மா லயிக்கும் இடம். மனமெனும் குரங்கு முக்குணவயப்பட்டது முக்குணங்களையும் ஒருமிக்க ஒருமுகப்படுத்த ஒரு தனியிடம் தேவைப்படுகிறது. அத்தனியிடமே ஆலயமாகக் காட்சி தருகிறது. இவ்வகையில் நம் முதலியாரவர்கள் ஆலயம் தொழுவது சாலவும் நன்றெனக் கொண்டவர். "நா மறக்கினும் சொல்லு நா நமச்சிவாயவே" என்ற திருநாவுக்கரசரின் அருள்வாக்கை கடைப் பிடித்தவராய் ஆண்டவனை மறவாச் சிந்தையராய் வாழ்ந்தவர். மேலும் தம்மூருக்கு அண்மையிலுள்ள தணிகையமர் வேலவனைத் தொழாத நாளை வீணாளாகக் கருதும் கருத்துடையவர். எவ்வுயிரிலும் எள்ளுக்குள் எண்ணெய்போல் நீங்காதுறைகின்றார் இறைவன் ஆதலின் நடமாடும் தெய்வங்களாகிய ஏழைமக்களுக்கு, ஆண்டுதோறும் வைகாசித் திங்களில் திருத்தணிகையில் தங்களால் அமைக்கப்பட்ட மடத்தில் உணவளித்துப் போற்றும் பணியைப் பரம்பரை பணியாகக் கொண்டுள்ளார். உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே யாதலின் அப்பணியைச் சிறக்கச் செய்து ஏழையர் பசிதீரப் புசிப்பதைக் காண்பதில் தனிமகிழ்ச்சி கொண்டவர் நம் முதலியாரவர்கள்.

முதலியாரின் பத்திப் பெருக்கினையறிந்தே 1946ம் ஆண்டில் தணிகை அறநிலையக் குழு உறுப்பினருள் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். அடுத்த இரண்டாண்டுகளில் ஷ அறநிலையத்தின் நிருவாகக் குழு தர்மகர்த்தர்கள் மூவருள் ஒருவராகவும் இருந்து பணியாற்றினார். முருகன் திருவருள் துணைகொண்டு தணிகை மலையில் மேலைக் கோபுரத்தை 1945-ஆம் ஆண்டில் கட்டத் தொடங்கி அவ்வாண்டிலேயே முடித்து அடுத்த ஆண்டில் குடமுழுக்கும் தம் பொருட் செலவில் செய்து மகிழ்ந்து முருகன் திருவருளுக்குப் பாத்திரரானார். ஆலயத் தருமகர்த்தாராயிருந்த காலை கோயில் வழிபாடியற்றும் குருக்களிடையேயும் குமாஸ்தாக்களிடையேயும் அவ்வப்போது ஏற்பட்ட பிணக்குகளை நடுநிலைமை வகித்து நியாயம் வழங்கிச் சீர்திருத்தங்கள் பல சிறக்கச் செய்தார்.

சோழ மன்னன் இராசராசன் கட்டுவித்த தஞ்சைப் பெருவுடையார் கோயில் கோபுரம் போன்று, நம் முதலியாரவர்கள் கட்டிய மேலைக் கோபுரம் மலைமேல் நின்று இவர்தம் புகழின் மலைவிளக்கெனத் திகழ்கின்றதெனின் புகழுரையாகாது. முருகன் புகழ்பாடி, சொல்லித் திருவருள் பேற்றை நாடிவரும் திருமுருக கிருபானந்தவாரியார் அவர்களுடன் முதலியாரவர்கள் மிக நெருங்கிய தொடர்பும் அணுக்கத் தொண்டும் பூண்டவர் என்பது யாவம் அறிந்ததே.

கல்விப் பணி

" இம்மை பயக்குமால்: ஈயக் குறைவின்றால்
தம்மை விளக்குமால்: தாமுளராக் கேடின்றால்
எம்மை யுலகத்தும் யாங்காணேம் கல்விபோல்
மம்மர் அறுக்கும் மருந்து. "

என்றும், ...
" சிற்றுயிர்க் குற்ற துணை, " என்றும் பலவாறாகக் கல்வியின் சிறப்பை உலகிடைத் தோன்றிய எல்லாப் பேரறிஞர்களும் ஒரு சேரப் புகழ்ந்து கூறியுள்ளனர். மற்ற யாவற்றைக்காட்டிலும் மன்னுயிருக்குக் கல்வியே சாலச்சிறந்ததென்பது யாவரும் அறிந்த பேருண்மையாகும்.

திரு.செங்கழனி முதலியார் அவர்கள் 1949-ஆம் ஆண்டு வடாற்காடு மாவட்டக் கழக உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் மாவட்டக் கழக உறுப்பினராகப் பல ஊர்களுக்குச் சென்று பார்வையிட்ட போது, ஒரு உண்மை தெரிய வந்தது. பல ஊர்களில் உயர்நிலைப் பள்ளிகள் இருப்பதையும், அவற்றால் மாணவ மாணவிகள் அறிவுக் கண் பெற்றுத் துலங்குவதையும் நேரில் கண்டார். தம்மூராகிய மின்னலிலும் ஏன் ஒரு உயர்நிலைப்பள்ளி இருக்கக்கூடாது என்று எண்ணினார். தம் வட்டாரத்தினர் உயர்கல்வியாம் தேனினைப் பெறமுடியாது தவிப்பது அவர் உள்ளத்தை உறுத்தியது.

மின்னல் நகரச் செங்குந்தப் பெருமக்களை கூட்டித் தம் கருத்தைக் கூறினார். எல்லோரையும் இணங்கச் செய்ததோடு, எல்லோரையும் பங்கு கொள்ளவும் வகை செய்தார். மாவட்ட கழகத்தில் தம் செல்வாக்கை உபயோகித்து மின்னலில் உயர்நிலைப்பள்ளி திறப்பதற்கு முடிவு செய்யச் செய்தார்.

பள்ளிக் கட்டிடத்தை சிறப்பாகக் கட்டி முடிக்கவும், அதற்கு ஆவனவற்றைப் பொறுப்பாக அவ்வப்போது செய்யவும் பள்ளிக் கட்டிடக் குழு ஒன்றை நிறுவினர். திரு.செங்கழனி முதலியார் அதன் தலைவராக ஆனார்.

" அருமை யுடைத்தென்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும். " -

என்ற பொய்யா வாக்குப்படி ஊக்கமும், உழைப்பும் இருப்பின் உலகில் இயலாததும் இல்லையன்றோ!

மின்னல் நகரில் வடகிழக்குக் கோடியில் பள்ளிக் கட்டிடம் கிடுகிடுவென வளர்ந்து மின்னலைப் போல மின்னலாயிற்று.

15-06-1951-ஆம் நாள் மின்னல் நகரத்துக்கு ஒரு சிறப்பு மிக்க தனித்திரு நாளாகும். அறிவுச்சுடரைத் தூண்டி - மக்கள் மனவிருளைப் போக்கும் கலைக் கூடத்தைத் திறந்து வைத்த திரு நாளன்றோ அப் பெருநாள்! அப் பொன்னாளை மின்னல் நகரம் அடைவதற்கு முதற்காரணர் திரு.செங்கழனி முதலியாரே ஆவார். என்பது யாவரும் அறிவர்.

அந்நாளைய சென்னை மாநிலத் தொழிலமைச்சராக விளங்கிய திரு.C.பெருமாள்சாமி ரெட்டியார்,M.L.C. அவர்கள் இப்பள்ளியைத் திறந்து வைத்தார். திரு.N.V.சுகவனம்,I.C.S. அவர்கள் தென்புறக் கட்டிடத்துக்குக் கால்கோள் நாட்டினார்.

இளங் குழந்தையும் புதுப் பள்ளியும் ஒரே தகுதியுடையவை என்பது சாலவும் பொருந்தும். தொல்லைதரும் எண்ணற்ற நோய்களுக்கு இரையாகாமல் தப்பிப் பிழைத்த பிறகே குழந்தை பெரிதாகி இளைஞனாகிறது. புதுப்பள்ளியும், இடம் போதாமை, உடனே உயர் படிவங்கள் தொடங்க முடியாமை, நல்லாசிரியன்மார்கள் கிடைக்காமை, மூன்றாம் படிவம் முடித்த மாணவர்கள் இதில் தொடர்ந்து படிக்க முடியாமை, முதலிய பல இன்னல்களிலிருந்து தப்பிய பிறகே முழுப் பள்ளியாகித் தலை நிமிர்ந்து நிற்க முடிகின்றது. மின்னல் உயர்நிலைப் பள்ளிக்கும் மேலே குறிப்பிட்ட எல்லா இன்னல்களும் தோன்றி இருக்கின்றன.

நெஞ்சில் உறுதியும், நேர்மைத் திறனும் மிக்க திரு. முதலியார் அவர்கள் தம் உடல், பொருள், செல்வாக்கு முதலியவற்றையும் ஈடு வைத்து முழு மூச்சாக உழைத்து இப்பள்ளிக்கு வந்த இடுக்கண்களை எதிர்த்து நிற்கவே அவை பகலவனைக் கண்ட பனி போல விலகியோடின. நான்காம் படிவம் வரக் காலம்தாழ்த்தியபோது பன்முறைப் பெருமக்கள் பலர் உதவியுடன் சென்னைக்கும், கோவைக்கும் திரிந்து ரூ.1000 முன்பணம் கட்டியும் உரிய காலத்தில் நான்காம் படிவத்தை அவர் கொண்டுவந்தார். அத்தகைய காலத்தில் வேறு பிறராக இருந்திருந்தால் திண்ணமாகச் சோர்ந்து பின்னடைந்திருப்பார் என்பது உறுதி. ஆனால் திரு.முதலியார் அவர்கள் ஓய்வும், சோர்வும் அடையாமல் எடுத்த செயலை முடித்தே திரும்புவேன் என்று உறுதியுடன் உழைத்து வெற்றி பெற்றார்.

நான்காம் படிவம் தொடங்கிய காலை இடம் போதாமல் இருந்தது. மேலிடத்தார் கட்டிடம் கட்டித் தாருங்கள் என்று நெருக்கினர். அப்போது முதலியார் தென்புறக் கட்டிடத்தைத் தாமே உடனிருந்து ஆறு வகுப்பறைகளைக் கட்டி முடித்து இடப் பஞ்சத்தை தொலைத்தார். மூன்றாண்டுகள் பள்ளியின் வேலையாகவே அல்லும் பகலும் உழைத்த அவர் உடல் நலிவுற்றார். தன்னுடல் வேலூர் மருத்துவ மனையில் இருந்தாலும், உள்ளம் மின்னல் பள்ளியைச் சுற்றியே வட்டமிட்டுக்கொண்டிருக்கும். அப்போது இறையருளால் அல்லது பள்ளியின் நற்காலத்தால் அவர் உடல்நலமுற்றுத் திரும்பினார்.

பொதுத் தேர்வுகள், பெரிய கூட்டங்கள் முதலியன நடத்துவதற்கு இப்பள்ளியில் பெரிய மண்டபம் இல்லாமை பெருங் குறையாக இருந்தது. உயர் படிவங்களும், அவற்றின் பிரிவுகளும் வளர்ச்சியுறவே சில வகுப்புகளுக்கு இடம் போதாமல் இருந்தது. இக்குறைகளை அறிந்த திரு. முதலியார் அவர்கள் ஐந்தாண்டு அபிவிருந்தி திட்டத்தின் உதவியைப் பயன் படுத்திப் பள்ளியின் பெருங்குறையைப் போக்க முன்வந்தார். கிராமத்தினர் பாதி தொகையளித்தால் அரசாங்கம் பாதி தொகை உதவி செய்வதே அபிவிருத்தி திட்டத்தின் சட்டம், அப்போது முதலியார் பிறர் உதவியை எதிர்பாராமல் கிராமத்தார் சார்பில் தேவையான முதற் பணத்தைக் கட்டி அரசாங்க உதவியைப் பெற்றார். வடபுறத்துப் பெரிய மண்டபம் வளமாக வளர்ந்து திருமுருக கிருபானந்தவாரியார் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. பள்ளியின் பெருங்குறையும் நிலையாக நீங்கியது.

அவ்வப்போது பள்ளிக்கு ஏற்படும் பல இன்னல்களை தாமே வந்து கேட்டு உடனுக்குடன் தீர்த்துப் பள்ளியை நிறைவெய்தச் செய்ததோடு இவ்வட்டார இளைஞர்களுக்கு.

“ எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு. “

என்னும் மறைமொழியையும் நிறைவெய்தச் செய்தார். இந்த வட்டாரத்திலேயே தன் நலன் கருதாமல் கல்விக்காக முதலியார் செய்த தொண்டு ஈடு இணையற்றது. இத்துணையதென்று கூறத் தகுவதன்று என்பது அறிவுடையோர் அனைவர்க்கும் நன்கு புலனாகும்.

திரு. முதலியார் மின்னல் உயர்நிலைப்பள்ளிக்கு முன்னின்று உழைத்தார். இவ்வூர் செங்குந்தப் பெருமக்கள் இந் நற்பணிக்குப் பின்னின்று ஏராளமான பொருளுதவி செய்தனர். இதற்கு இன்னல்வரும்போதெல்லாம் முதலியார் அவர்களுக்கு திரு.B.பக்தவச்சல நாயுடு MLA அவர்கள் யாண்டழைப்பினும் உடன் வந்து உதவி செய்ததும், திரு.மி.நாராயணசாமி ஐயர் B.A.,L.T., தலைமையாசிரியர் அவர்கள் அவ்வப்போது முதலியாருக்கு அரிய யோசனைகளை கூறி ஊக்குவித்ததும் ஈண்டுக் குறிப்பிடத் தகுந்தனவாகும்.

"முயற்சி திருவினையாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்திவிடும்,"

என்னும் பொய்யாமொழிக்கு இலக்கியமாய் முதலியாரின் முயற்சி, பாலைவனத்தில் பசுஞ்சோலை கண்டதுபோல இவ்வட்டாரத்தில் ஈடு இணையற்ற மாபெருங் கட்டிடத்துடன் இவ்வுயர்நிலைப் பள்ளி உயர்ந்து நிற்கச் செய்துவிட்டது. இதன் வளர்ச்சிக்கு முதலியார் அவர்கள் முதற்காரணர் என்பது யாவரும் அறிந்ததென்றாகும்.

மின்னல் உயர்நிலைப் பள்ளி, ஒரு குழந்தையென்றால் திண்ணமாக அதன் தந்தை திரு.ப.மு.செங்கழனி முதலியாரே ஆவார். என்பதில் ஐயமில்லை. அவர் பூதவுடல் மறையினும், புகழுடலைப் பொன்னென விளக்கிக் காட்டிக் கொண்டிருக்குமாறு அவர் இப்பள்ளியின் மூலம் இந்த வட்டாரத்துக்கு இணையற்ற கல்விப் பணியாற்றினார். இதன் மூலம் அவர் புகழ் என்றென்றும் நிலைத்து நீடூழிக்காலம் நிற்கும் என்பது உறுதி.

வாழ்க அவர் புகழ்!
ஓங்குக அவர் தொடங்கிய கல்விப் பணி!

குண நலன்கள்

அத்திப்பழத்தில் ஆயிரக்கணக்கான கொசுக்கள் தோன்றி உடனே மறைவதுபோல கோடானு கோடி மக்கள் பிறந்து மறைந்து கொண்டே இருக்கின்றனர். மறைந்தவர்களில் பலரைப் பற்றி நமக்கு ஒன்றுமே தெரியாது. ஆயினும் ஒரு சில பெரியோர்களை மட்டும் உலகம் நன்றாக நினைவிறுத்திக் கொண்டிருக்கிறது. அவர்கள் இவ்வுலகிற் செய்த செயற்கருஞ் செயல்களே அதற்குக் காரணமாகும். கோடிக்கு ஒருவராகிய அவர்கள், தாம் செய்த சீரிய செயல்கள் மூலம் இவ்வுலகில் தம் புகழை நிலைத்திருக்கச் செய்து செல்கின்றனர். கைமாறு கருதாமல், கடமை என்ற பெருநோக்குடன் அவர்கள் தம் குறிக்கோளை முடித்துச் செல்கின்றனர். அவர்கள் சீரிய செயலாற்றவும், சிறந்த குறிக்கோளை வகுத்துக்கொள்ளவும் உறுதுணையாக அமைவது சில உயர்ந்த நற்குணங்களே காரணமாகும்.

திருவாளர்.ப.மு.செங்கழனி முதலியார் அவர்கள் இந்த வட்டாரத்தில் பலராலும் நன்றாக அறியபட்டவர். மின்னல் என்ற உடனே செங்கழனி முதலியார் என்று நினைக்கும்படி ஆகிவிட்ட ஒருவராவார். அவர் மாவட்டக் கழக உறுப்பினராக ஐந்தாண்டுகள் இருந்து பல பள்ளிகட்கும், சிறப்பாக மின்னல் உயர்நிலைப் பள்ளிக்கும், இந்த வட்டாரத்து ஆசிரியர் நன் மக்கட்கும் அவர் ஆற்றிய தொண்டு அளவிடற்கரியது மற்றும், திருத்தணிகை கோயில் தேவஸ்தானக் குழு உறுப்பினராகப் பல ஆண்டுகள் இருந்து அவர் செய்த நற்செயல்கள் நம்மால் மறக்க இயலாதனவாகும். அத்துடன் அவர் தணிகைக் கோயில் மேற்குப்புற கோபுரத்தைத் தம் சொந்த செலவில் கட்டி முடித்து நிலையாகத் தம் புகழை நிறுவி விட்டார். திருவாளர் முதலியார் அவர்கள் இத்தகு சிறந்த செயல்களைக் குறுகிய கால எல்லைக்குள் ஆற்ற முடிந்ததென்றல் அவரிடம் அமைந்த சில அருங்குணங்களே அவற்றுக்குக் காரணம் என்றால் அது தவறாகது.

திரு.முதலியார் அவர்களிடம் எண்ணற்ற நற்பண்புகள் அமைந்திருந்தன. அவற்றுள் சிலவற்றை காண்போம்.........

"செல்வம் வந்துற்ற காலைத்தெய்வமும் சிறிது பேணார்:................ வறியபுன் செருக்கு மூடிவாயுளார் மூகராவர்: பறியணி செவியுளாரும் பயிறரு செவிடராவர் : குறிபெறு கண்ணுளாரும் குருடராய் முடிவரன்றே " என்று பெரும்பாலான மக்களைப் பற்றிக் குறிப்பிடுகிறது. இச்சீரிய செய்யுள். இதற்கு விதி விலக்காக உலகில் சிலராவது இருக்க இயலும் என்பதைத் திரு.முதலியார் போன்றவர்கள் உலகிற்கு உணர்ந்தாமல் இல்லை.

திரு.முதலியார் அவர்கள் தம் முயற்சியால் வாணிபத்தில் வளமான செல்வம் திரட்டிய காலத்தும் அவர் தெய்வத்தை மறந்தாரில்லை. அதற்க மாறாக அவர் தம் ஊதியத்தில் பெரும்பகுதியைத் தெய்வப் பணிக்குச் செலவிட்டிருக்கிறார். அவரிடம் நிரம்பிய தெய்வ பக்தி இல்லாமல் இருந்திருந்தால், தெய்வப் பணிக்காக எண்ணற்ற செல்வத்தை செலவிட்டிருக்கமாட்டார்: தெய்வ மணங்கமழும் திருமுருக கிருபானந்தவாரியார் அவர்களை எப்போதும் தம் உற்றராகக் கொண்டு உழன்றிருக்க மாட்டார்: தணிகையில் மாபெருங் கோபுரத்தை மலையென எழுப்பி இருக்க மாட்டாரன்றோ!

திரு. முதலியாரிடம் தாம் பெரிய செல்வர் என்ற செருக்கு எப்போதும் இருந்ததில்லை. எளியவர்க்கு எளியவராகவே இறுதிவரை வாழ்ந்து வந்தார் பேச்சு செயல், யாவற்றிலும் அவர் செருக்கொழிந்தே வாழ்ந்தார். ஏழை எளியவர்களிடம் எப்போதும் அவர் பாராமுகமாக இருந்ததில்லை. முதலியார் காட்சிக்கெளியவர், கடுஞ்சொல் தெரியாதவர் என்ற உண்மையை அவருடன் பழகியவர் நன்கறிவர்.

அருள்உள்ளம்:

இந்த வட்டாரத்து இளைஞர்கள் உயர்நிலைக் கல்விபெற வசதியில்லாக்குறை, முதலியார் அவர்களை நீண்ட நாளாக உறுத்திக் கொண்டிருந்தது. தாம் மாவட்டக் கழக உறுப்பினராகிய காலத்திலாவது அக்குறையைப் போக்கவேண்டும் என்று எண்ணினார். எண்ணியதைத் திண்ணியதாகக் கொண்டார். மின்னல் போன்ற சிறு கிராமத்தில் உயர்நிலைப்பள்ளி திறப்பதென்பது அவ்வளவு எளிய செயலன்று. மலையை அகழ்ந்து மார்க்கம் அமைப்பது போன்றதாகும். இவ்வட்டார இளைஞர்கள் எதிர்காலச் சந்ததியார் முதலியவர் பால் அவர்கொண்ட அருளே, எத்தனையோ இன்னல்களை எதிர்த்து இத்தனை பெரிய செயலைச் சாதிக்க இயன்ற தெனலாம் மற்றும்,

பல ஏழை மாணவர்கள் பள்ளிக்குச் சம்பளம் கட்டப் பணமின்றி வருந்திய காலங்களில் அத்தகையவர்களை அவரே அழைத்துச்சென்று பணங்கொடுத்தனுப்புவார். மற்றும், பள்ளியில் பல சிறப்பு விழாக்கள் நடத்திக் கல்வியில் மாணவர்க்கு ஊக்கம் பெருகப் பணமும், வேறுபிற பொருள்களும் தந்து உதவி செய்துள்ளார்.

திருமணம், கல்வி இன்ன பிற முன்னேற்றம் முதலிய நற்காரியம் பணமில்லாமல் தடைபடுகிறது. என்று யாராவது வந்து கூறினால் அவர்கள் யாராயிருப்பினும் திரு.முதலியார் உடனே உதவி செய்யத் தவறமாட்டார். ஏழைகள், துறவிகள், விருந்தினர், மாணவர் முதலியோர் என்றும் தம்மில்லத்தில் உணவுண்டுச் செல்ல வசதி செய்து கொடுத்து

" ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியமில்லை உயிர்க்கு "

என்ற திருமறைக்கு இலக்கியமாகிவிட்டார்.

ஊனுண்ணமை:

திரு.முதலியார் அவர்கள் இளமை முதலே ஊனுண்ணமையாகிய உயர்ந்த அறத்தை மேற்கொண்டிருந்தார். குறிக்கோளுடன் வாழ்பவருக்கு எத்தனையோ இடுக்கண்கள் எதிர்ப்படும் என்ற பெரியோர் அமுதவாக்குக் கிணங்க, முதலியார் அவர்கட்கு உடல் இளைத்து, இரத்தம் சுவறிச் சருகுபோல் ஆனபோதும் - உயர்ந்த மருத்துவர்கள், உற்றார் உறவினர் பலரும் -வற்புறுத்திய காலத்திலும் ஊனுண்ண அவர் இசைந்தாரிலர்: அனைவர்க்கும் அவர் இறுத்த ஒரே பதில் " உயர்ந்த கொள்கையைக் கைவிட்டுப் பெறும் உயிர், உடல் நசையைக் காட்டிலும், அவற்றை இழந்தேனும் அவ்வுயர்ந்த அறத்தினைக் காப்பேன் " என்பதாகும்

" உண்ணாமை வேண்டும் புலால் பிறிதொன்றன்
புண்ணது உணர்வார்ப் பெறின் "

என்னும் பொய்யா மொழியை இறுதிவரைப் பொய்க்காமல் அவர் கடைபிடித்து வந்தார்.

திரு. முதலியார் அவர்களின் குணங்களைத் தனித்தனியாகப் பிரித்துக் கூறுவதைக் காட்டிலும், சுற்றந்தழால், சொற்றிறம்பாமை, நன்னட்ப்பு, நேர்மை, இனியவை கூறல், அழுக்காறமை, பொறுமை என்று வள்ளுவர் உலகுக் குணர்த்திய பல உயர்ந்த அறங்களை அவர் வாழ்க்கைக்கு உற்ற துணையாகப் பெற்றிருந்தார் என்று சுருங்கக் கூறுதல் நலம் சான்றோர்கள் நற்குண நற்செயல்கள் மூலம் இவ்வுலகில் பல சாதனைகளைச் சாதித்து மறைகின்றனர். அவர்கள் மறைந்த பிறகும் அவர்கள் சாதனைகள் உலகில் மங்காப் புகழுடன் என்றும் மணம் வீசிக்கொண்டிருக்கும். சான்றோராய்த் திகழ்ந்த திரு.முதலியார் அவர்களும் எல்லா நற்குணங்கட்கும் இடனய்-குணக் குன்றாய், ஆனால் குடத்துள் விளக்காய்-அமைந்திருந்தார்.

திரு.முதலியார் அவர்களும், மற்றவர்களைப் போலவே இவ்வுலகில் தோன்றினார். ஆனால், நற்குண நற்செயல்களால், நிலையற்ற உடற்கொண்டு நிலையான புகழ் பெற்று வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து இறுதியில் தெய்வத்துள் ஒருவராகி விட்டார்.

" ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பதொன்றில் "

என்னும் மறைமொழிக்கேற்ப திரு.முதலியார் அவர்கள் நிலையிலா உலகில் நிலையான நீள் புகழைத்தனதாக்கிக் கொண்டார். அவர் புகழ் என்றும் எங்கும் பொங்கிப் புதுமணங்கமழ்ந்து கொண்டிருக்கும் என்பதில் ஐயமில்லை.

வாழ்க அவர் புகழ்!
வளர்க அவர்தம் ஆவல்!

மறைந்தும் மறக்கப்படாதவர்:

" தீவளியால் நற்காய் உதிர்தலும் உண்டு " என்பதுபோல் நலம்பல விளைக்கும் நம் முதலியராவர்களைக் கொடுங்காலன் கொண்டு சென்றான். ஆனால் முதலியாரவர்கள் 1958-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் இருபதாம் நாள் இரவு தம் பூதவுடலை நீத்தார். அன்று ஒரு துன்பநாள் எனலாம், இவர் தம் மறைவு மின்னல் நகர் மக்களுள் ஒரு பெருங்கலக்கத்தை உண்டாக்கியது. கட்சிப் பிணக்கைக் கடிந்தெறிந்த மக்கள் பெருவாரியாகக் கூடித் தம் மரியாதையைத் தெரிவித்துக்கொண்டனர். முதலியாரின் சவ ஊர்வலம் தெருக்களின் வழியே நிறைந்து காணப்பட்ட தோடன்றிச் சாதிசமய வேறுபாடின்றி மக்கள் கடைசி மரியாதையைப் புலப்படுத்தியது. குறிப்பிடத்தக்கதாகும். முதலியாரின் மறைவுக்காக மின்னல் உயர்நிலைப்பள்ளி மூடப்பெற்று ஆசிரியரும் மாணவரும் வரிசையில் சென்று தம் இறுதி மரியாதையை எடுத்துக் காட்டினர்.

முதலியார் மறைவு அறிவுக்கண்பெறும் மாணவர்க்கும், ஆசிரியர்க்கும், மின்னல் வாசிகட்கும், இன்னும் மற்றவர்க்கும் ஒரு பெரும் இழப்பேயாகும். தந்தையை யிழந்து நிற்கும் மக்கட்கும், உடன் பிறப்பை யிழந்து நிற்கும் உறுதுணைத் தம்பியர்க்கும், மகனை இழந்து பேதுறும் தந்தைக்கும், தலைவனை யிழந்து தளரும் தகைசால் மனைவியார்க்கும் ஈடுசெய்ய முடியாத இழப்பேயாகும். இயற்கையை நினைந்து ஆற்றியிருத்தல் அமைவுடைத்தாகும். பருவுடலை நீத்துப் பாரிடை மறைந்தாரெனினும் நம் முதலியார் அவர்களின் புகழுடல் என்றும் நிலையாக நின்று விளங்குகின்றது. புகழுடல் விளங்க நிற்கும்

உயர்திரு. மீ.நாராயணஸ்வாமி அய்யர்

அவர்கள் B.A.L.T.,

தலைமையாசிரியர்

கழக உயர்நிலைப்பள்ளி, காட்டுப்பாடி.

ஆரவாரத்தன்மை சற்றேனுமின்றி உருக்காட்டாது உழைத்து உம்பருலகம் புகுந்த உத்தமரின் பாதையிலே உலவி அண்மையில் புகழுடம் பெய்திய செம்மல் உயர் திருவாளர் ப.மு.செங்கழனி முதலியார் அவர்களை மாந்தருக்குள் ஒரு மணியெனல் தகும். தனக்கென வாழாப் பிறர்க்குரியாளராய் தலை சிறந்தோரின் குழாத்தில் திகழ்ந்த அப்பண்புடைப் பெரியாரின் நலம் பயக்கும். நட்பென்னும் பேற்றினைப் பெற்று பல துறைகளிலும் தற்போது முன்னேற்றம் கண்டுவரும் முன்னல் கிராமத்தின் உயர்நிலைப்பள்ளியின் தலைமை ஆசிரியப் பதவியில் தொடர்ந்து நான்கு ஆண்டுகள் பணியாற்றும் அரியவாய்ப்பினைத் திருவருள் கூட்டிய காரணத்தால் அடைந்து இன்புற்ற நன்னாட்களே எனது வாழ்வில் சிறந்தனவாகு மென்று கூசாது கூறலாம்.

காலஞ்சென்ற பெரியார் உயர் திரு.முதலியாரவர்கள் பண்பாடு மிக்க செங்குந்த மரபினரின் தலைசிறந்த தலைவர்களுள்ளும் உயரிய இடத்திற்குரியவராவர். உள்நாட்டுப் பிராந்தியத்தில், எழுத்தறிவின்மை மலிந்து கிடந்த நாட்டுப்புறப் பகுதியொன்றில் உயர்தரக் கல்வியாம் இருளகற்றும் உண்மை விளக்கினை ஏற்றிவைத்த தோடன்றி அது என்றென்றும் மங்காது சுடர்விட்டு ஒளி வீசும் வண்ணம் வழிவகைகளை வகுத்துப் பாமரமக்களிடையே புதியதோர் விழிப்பினையும் அமைதியானதோர் அரும் புரட்சியையும் தோற்றுவித்த அவர் தம் ஆற்றலும் சாதனையும் சொற்களைக் கடந்தவையாகும். புகழை விழையாது அடக்கத்துடன் ஆற்றிய அவ்வருந்தொண்டு பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய தொன்றாகும்.

சிந்தையிற் றெளிந்த கல்வியும், செழுமதியும் பெற்றிருந்த அவர் தம் கருத்துலகில் தோன்றி உள்ளத்திலமைந்து, உலகத்தில் உருப்பெற்றது முன்னல் உயர்நிலைப்பள்ளி யென்பதை அறியாதாரும் உளரோ? அப்பள்ளி முழு உருப்பெற்ற முதலாண்டிலேயே உயர்பண்பினைப் பெற்றதோடு நில்லாமல், பெறுதற்கரிய பல பரிசுகளையும் புகழையும் ஈட்டிய மாணவரைத்தோற்றுவித்தகாலை கழிபேருவகை யெய்தித் தம் கனவு நனவாயிற்றென்று நவின்று

பள்ளிக்கூடத்தின் ஆசிரியர் குழாத்தினரை அவர் பாராட்டிய காட்சி என் கண் முன் இன்றும் அகலாமல் நிற்கின்றது. மாணவர் மதிவிளக்கம் பெற்றதைக் கண்டு மட்டிலா மகிழ்ச்சியடைந்த அவர் தம் பெருந்தகைமை பிறருக்கு ஒரு எடுத்துக்காட்டாக விருந்தது என்பதைச் சொல்லத் தேவையில்லை. பள்ளிச்சாலைகள் கிராமப்பகுதிகளில் தோன்றுவதற்கு இடையூறாக மதியும், நிதியும், செல்வாக்கும் படைத்தோர் சதிசெய்வதைக் கண்ணுறும்போது பாலைவனத்தில் பல காதங்களுக்கிடையே தோன்றும் சோலைகளினிடையே காணப்படும் நீரூற்றிற்கொப்பாகும் அவர் தம் அரிய சேவை என்றுரைத்தல் சிறிதும் மிகையாகாது எனலாம்.

பள்ளிக்கூடத்தலைவன் என்ற முறையில் கட்டிட வசதிக்கான பெரிய திட்டங்களை நான் வகுத்த காலை பெரும் பொருட்செலவில் அவற்றை விரும்பியவாறே நிறைவேற்றிவைத்த அன்னாரின் வள்ளன்மையை நினைக்குந்தோறும் நன்றியுணர்வு மேலீட்டால் அதை வெளிப்படுத்த சொற்கள் கிட்டாத காரணத்தால் வாளாவிருக்கத்தான் முடிகின்றது. அதுவன்றி பள்ளிக்கூட ஆசிரியர் குழாத்தினருடன் அவர் நெருங்கிய தொடர்பு கொண்டு அனைவருக்கும் ஒரு பெரியண்ணராக விளங்கினரென்பதைச் சொல்லவும் வேண்டுமோ? விதியை மதியால் வென்றோர் உளரோ என்னும் "ஐயப்பாடு கொண்டார்க்கு உளர்" என்று ஆணித்தரமான விடையிறுக்க முன்னல் கிராமத்தின் கலைக்கோயில் எனத்தகும் உயர்நிலைப் பள்ளியின் மாண்புமிக்க கட்டிடங்களும் பண்பாடுமிகுந்த சூழ்நிலையும் பேரழகுடன் கண்டோர் களிக்கும் வகையில் காட்சி அளித்து நிற்பதொன்றே போதுமானதாகும். எல்லாவற்றிற்கும் சிகரமென விளங்கும் அவர் தம் கடவுட்டிருப்பணிக்குச் சிறந்த சான்றாகத் திருத்தணிக்குன்றில் நிற்கும் கைபுனைந்தியற்றிய கவின் பெறுவனப்புடன் திகழும் வானளவிய கோபுரம் ஒன்றே சாலும் என்பதை உலகமறியும். திருத்தணி அறநிலையத்தின் பொறுப்பாளர் குழாத்தில் சிறந்தோரென ஆந்திர மாநில அரசினால் பாராட்டப் பட்ட அத்தமிழ்த் திருமகனாரின் நினைவு மறக்கற்பால தொன்றன்று வடஆற்காடு மாவட்டக் கழக உறுப்பினராக அன்னார் ஆற்றிய அரும் பணியும் ஈண்டு நாம் நினைவு கூர்வதற்குரியதாகும். நமது பேரன்பிற்கும் பெருமதிப்புக்கும் உரியோராகி அறம் வளர்த்த நல்லோர் ஒருவர் அமரரானர்.

இதயத்தோடு இதயம் பேசும் விண்ணுலக உணர்விலே நாமிருக்கும் இத்தருணத்தில் அவரது நல்வினைப்பயன்களை நினைவு கூர்ந்து அஞ்சலி செய்து, அவர் தம் ஆன்மா பரிபூரணனது திருவடி நீழலில் அமைதி பெற இறைஞ்சுவோமாக.

உயர்திரு. **B.பக்தவச்சல நாயுடு,** MLA

அவர்கள் உதவி சபாநாயகர்

சென்னை, சட்டசபை

மின்னல் உயர்திரு P.M.செங்கழனி முதலியார் அவர்கள் 20-01-1958-ல் இறையடி கலந்த செய்தி கேட்டு மிக்க வருந்தினேன், திரு.செங்கழனி முதலியார் அவர்கள் கல்வித்துறையிலும், சன்மார்க்கத்துறையிலும் செய்த சேவையை யாரும் மறக்க முடியாது. மின்னலில் நடைபெற்றுவரும் உயர்நிலைப்பள்ளி ஆரம்பிப்பதற்கு முழு காரணகர்த்தாவாக அவர் விளங்கினார். பள்ளியில் படிக்கும் மாணவர்கள் எல்லோரும் அவரை பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். மிகவும் தெய்வபக்தி வாய்ந்த அவர் திருத்தணிகை ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானத்துக்கு டிரஸ்டியாக இருந்து இறைவன் பணியை ஆற்றியுள்ளார். மிகுந்த தர்ம சிந்தனையுடைய பெரியார் இவ்வுலகம் துறந்து இறைவனோடு இரண்டறக் கலந்துவிட்டார். அன்னார் ஆத்துமா சாந்தியடைந்து அவர் எண்ணங்களை நிறைவேற்ற நினைவு மலர்க்குழுவினர் தொண்டுக்குப் பாராட்டுதல் அளிக்கின்றேன்.

Sri.Doraisamy Naidu,

Secretary, District Board, N.A., Vellore.

My dear Sri. Vedadri Pillai,

I learn that Sri.P.M.Sengalani Mudaliar is dead. He is the founder of the Board High School Munnal and it is no exaggeration to say that the entire institution (B.H.S. Munnal) Owes its starting and growth to his untiring zeal and enthusiasm. May his soul rest in peace. Please convey my heartfelt Condolences to the members of the bereaved family.

உயர்திரு. R.C.சாமண்ண கவுண்டர், MLA

முன்னாள் மாவட்டக் கழகத் துணை தலைவர் வடார்க்காடு.

அன்புள்ள திரு.தலைமை ஆசிரியர் அவர்களுக்கு

வணக்கம்,

ஐயா, தாங்கள் அனுப்பிய தகவலின்பேரில் எனது அருமை நண்பர் ஸ்ரீ P.M.செங்கழனி முதலியார் அவர்கள் இறந்துவிட்டதை அறிந்து மிக்க துக்கம் அடைகிறேன்.

தங்களுக்கும் அவருடைய குடும்பத்தாருக்கும், நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரியபடுத்திக் கொள்ளுகிறேன்.

அன்னருடைய ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கிறேன்.

எனது அருமை நண்பர் ஸ்ரீ P.M.செங்கழனிமுதலியார் அவர்கள் சாந்த புருஷர். நான் ஜில்லா போர்டில் வைஸ் பிரசிடெண்டாக இருக்கும்போது இவர் மெம்பர். போர்டில் மெம்பர்களிடத்திலும் ஸ்ரீ தலைவர் ராமசந்திர ரெட்டியார் அவர்களிடத்திலும் ஆபீசிலும் நல்ல மதிப்பு வாய்ந்தவராகவும் பல ஜில்லா போர்டு முக்கியமான வேலைகளை அவர் தொகுதிக்குச் செய்து வைத்திருக்கிறார்கள். அந்தத் தொகுதி மக்கள் அவருக்கு என்றும் நன்றியுள்ளவர்களாக இருக்கவேண்டும். அவர் பெயர் அழியாதபடி செய்திருக்கிறார். பொறுப்பு வாய்ந்தவர், பழைய பெரிய குடும்பத்தில் பிறந்தவர். தன்மை வாய்ந்தவர், பொது ஜனங்களிடத்திலும் கண்ணியமோடு நடந்துகொண்டார்.

நண்பர்களிடத்திலும் பந்துக்களிடத்திலும் அன்போடு விஸ்வாசமாக நடந்துகொண்டவர். அதிகாரிகளிடமும் பெரியவர்களிடத்திலும் நன்மதிப்பு பெற்றவர். இவர் விஷயத்தில் அன்புகொண்டு இவ்வளவு சிரத்தை எடுத்துக்கொண்டதால் நன்றி செலுத்துகிறேன். வேணும் வணக்கம்.

****

முன்னல் கிராமப் பெருநிலக்கிழாரும்,
போர்டு உயர்நிலைப்பள்ளியினை நிறுவியவருமான
உயர்திரு. **ப.மு.செங்கழனி முதலியாரவர்கள்**
இறையடி யடைந்தமை கேட்டுப் பாடிய

கையறு நிலைக் கவி

(நேரிசையாசிரியப்பா)

தெய்வப் புலமைச் செல்வர்கள் சிறந்து
வாழும் தொண்டை வளநா டதனில்
இக்கும் நெல்லும் இணையிலா தோங்கி
முனைந்து விளையும் முன்னல் தன்னில்,
குந்தம் பயில்செங் குந்தர் குலத்தான்
பணிவும் இன்சொலும் பண்பெனக் கொண்டான்
செங்கழனி யெனும் செம்மைசேர் பெயரான்
சிவனை மறவாச் சிந்தை யாளன்
தணிகை முருகன் தளியின் கோபுரம்
பண்புடன் விளங்கப் பணிசெய் தோனே:
இன்னகர் சூழும் இளஞ்சிறார் யாவரும்
பள்ளிக் கலைகளை பாடுறக் கற்க
நகர்செங் குந்தரை நண்புடன் கூட்டிச்
செங்குந்தர் நிலையம் செம்மையாய்க் கண்டு
உயர்நிலைப் பள்ளியை ஓங்கச் செய்தோன்:
அவன்றான்,
ஏவிளம்பியின் இயல்தை ஏழ்நாள்,
தந்தைநொந்து தளர்ந்(து) இனையவும்,
தம்பியர் எல்லாம் தாங்கொணாத் துயரால்
அழுது புரண்டே ஆரஞர் உறவும்:
மைந்தரும் மகளிரும் மனத்துறு துயரால்
நூலறு முத்தில் நுண்டுளி சிதறி
ஏங்கி ஏங்கி இனைந்து வாடவும்,

அருளில் கூற்றம் ஆடலிற் கொண்டதைக்
கடிதம் வாயிலாக் கண்டு வருந்தினேம்:
எங்கள் வருத்தமும் இயம்புதற் கரிதே!
இப்புவி வாழ்வினை யின்புடன் விடுத்து
இறையடி தன்னில் கறையிலா துற்ற
அவன்தன் ஆன்மா அணி பெறச்
சிவனை யிறைஞ்சுவோம் சிறப்புடன் யாமே

இங்ஙனம்

சைதாப்பேட்டை
29-01-1958 ரா.சி.வேலன் கம்பெனியார்.

ஆக்கியோர்- திரு.புலவர்.ப.இராமலிங்க முதலியார் அவர்கள்,
தலைமைத் தமிழாசிரியர்
கழக உயர்நிலைப்பள்ளி, நாட்டறன்பள்ளி.

****

உயர்திரு. **V.கிருஷ்ணசாமி அய்யர்** அவர்கள் B.A.L.T.,
முன்னாள் தலைமையாசிரியர்
கழக உயர்நிலைப்பள்ளி, முன்னல்.

நண்பரே!

நீங்கள் தெரிவித்த துக்கச் செய்தியால் மிகவும் வருத்தமுற்றேன். இனி முன்னல் பள்ளிக்குத் திருவாளர் செங்கழனி முதலியார்போல யார் ஆதரவு அளிக்கக்கூடும். என்று ஏக்கம்கொண்டேன். முன்னல் என்ற பெயரைக் கேட்கும்போதெல்லாம் அப் பெரியாரின் பெயர் கூடவே என் காதில் ஒலித்து வந்தது. அவர் என்னிடம் காட்டிய அன்பு மறக்க முடியாததோர் விஷயம்..

முன்னல் மாணவர்கள் நல்ல பண்புடையவர்களாக விளங்கவேண்டும் என்று மிகவும் ஆசைப்பட்டார். அவ்வாசை தலைமை ஆசிரியராக இருந்த என்னை மிகவும் கவர்ந்தது. படிப்பு விஷயத்திலும் அவர் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார். ஆங்கிலப் படிப்பு அதிகம் பெற்றிராத ஒருவர் அதில் கொண்டிருந்த மோகம் என் ஆச்சரியத்தைக் கிளப்பியது. தன் இனத்தாரை ஒன்று திரட்டி அவர்களுக்குத் தலைவராக விளங்கிய, காலம் சென்ற உத்தமரை முன்னல் வாசிகள் என்றும் மறக்க முடியாது.திருவாளர் செங்கழனி முதலியாரின் ஆத்மா அவர் வழிபட்டுவந்த முருகனின் திருவடியைச் சேர்ந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

****

திரு.**பு.கா.கங்காதர முதலியார்** அவர்கள்

செயலர், வேதாந்த தமிழ் வாசகசாலை, குடியேற்றம்.

உயர் திருவாளரும், மாபெரும் தலைவரும், செங்குந்தகுல திலகரும் ஆகிய திரு.P.M.செங்கழனி முதலியார் அவர்கள் நான் கண்ட அளவில் நற்குணக் குன்றாக விளங்கிய பெருந்தகையாளர். அவர் ஒழுக்கமும், உயர்வும், ஈகையும், இன்சொல்லும், அடக்கமும், ஆஸ்திகத் தன்மையும், இறையன்பும், மெய்யடியார்பால் விருப்பும் ஆகிய இன்னோரன்ன உயர்குணங்களைப் பெற்ற செம்மல் என்பது உலகம் அறியும். வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த திரு.முதலியார் அவர்களின் மறைவால் அவரது குடும்பத்திற்கேயன்றி நம் மக்கள் சமூகத்திற்கும் குறிப்பாகச் செங்குந்தர்களுக்கும் சொல்லொணாத் துக்கத்தில் அமிழ்த்தும். ஆயின் இன்னோர்க்கு எம்மொழி கூறி ஆற்றமுடியும் என்று எனக்குப் புரியவில்லை. இப்பெரியார் ஆற்றிய அரும்பணிகளும் சேவையும் நம் குல மக்கள் சரித்திரத்தில் முக்கியத்துவம் பெற்றவை. இமாலய நஷ்டம் போன்ற ஈடுசெய்ய முடியாதவை. இவரது பிரிவை எண்ணிக் கண்ணீர்விட்டுச் கவலையுறாது அப்பெரியாரின் ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறையடியை இறைஞ்சுவோமாக.

****

உயர்திரு.A.L.C.**கிருஷ்ணசாமி** அவர்கள்

முன்னாள் மாவட்டக் கழக உறுப்பினர், அரக்கோணம்.

சென்னை சென்று திரும்பினேன்! நண்பர் திரு.செங்கழனி அவர்கள் மறைந்தார். மறைந்த நண்பருக்கு "நினைவு மலராம்" அந்த நினைவு மலருக்கு என் கருத்துரை வேண்டுமாம். என்று முன்னல் உயர்நிலைப்பள்ளியின் தலைமை ஆசிரியர் கேட்டுக்கொண்டதைக் கண்டு திடுக்கிட்டேன். செய்தியை திடீரென்று கேட்டேனல்லவா,

அதனால்தான் திடுக்கிட்டேன். எனினும் உரிய காலத்தில் மலர் வெளியிடும் முயற்சியில் ஈடுபட்ட நினைவு மலர் குழுவினருக்கும், குறிப்பாகத் தலைமை ஆசிரியர் அவர்கட்கும் என் உளங்கனிந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

மக்களின் வாழ்க்கையின் முன்னேற்றத்திலே அக்கறை கொண்ட நல்லவர்களிலே நண்பர் திரு.செங்கழனி அவர்களும் ஒருவர் என்றால் அது மிகையாகாது. அவர் பிறந்த மாவட்டத்திலேதான் நானும் பிறந்து வளர்ந்தேன் என்பதால் நான் பெருமைப்படுகிறேன்.

ஒன்றே செய்! அது நன்றே செய்!! அதையும் இன்றே செய் என்ற முறையிலே வாழ்ந்து காட்டியவர். என்றும் எவர்க்கும் நல்லதைச் செய்வதிலே நாட்டம் கொண்டவர், நண்பர் செங்கழனி முதலியார் அவர்கள்: என்றாலும் விளம்பரத்தை வேண்டாதவர்.

ஏறத்தாழ 18 ஆண்டுகளுக்கு முன்னால் என்று எண்ணுகிறேன், ஆம்! அன்று நான் பள்ளி மாணவன் அதே ஆரம்ப உயர்தரப்பள்ளியில் 8-வது வகுப்பை முடித்துவிட்டுச் சிந்தித்ததுண்டு நான்மட்டுமல்ல: 8-வது படித்துவிட்டு உயர்வகுப்பு படிக்க வேண்டுமென்ற ஆர்வமுள்ள எண்ணற்றோர்: நகரப் பகுதிக்குச் சென்று உயர் வகுப்பு படிக்க வேண்டுமென்ற ஆர்வமுள்ள எண்ணற்றோர்: நகரப் பகுதிக்குச் சென்று உயர் வகுப்பு படிக்க வசதியற்றோர், வாழ்க்கையில் வளமற்றோர், எண்ணியதுண்டு. இதே கிராமத்தில் ஒரு உயர்நிலைப் பள்ளி இருக்கக்கூடாதா என்று. நானும் அப்படித்தான் எண்ணினேன். நம் வட்டாரத்தில் எல்லோரும் உயர்நிலைப்பள்ளியில் கல்வி கற்று இன்புற்றார். என்ற இன்பச் சேதி கேட்ப தெந்நாளோ! அந்த நாளும் வந்திடாதோ! என்று அடிக்கடி எண்ணி ஏங்கியதுண்டு.

ஆம் அந்த நாளும் வந்துவிட்டது. ஏக்கமுற்ற எண்ணற்றோர் துயர் துடைக்க, நண்பர் திரு.செங்கழனி அவர்கள் அரும்பாடுபட்டு ஒரு உயர்நிலைப்பள்ளியை உருவாக்கினார்.

அந்தோ! அத்தகைய நல்லவரைத்தான் நாமிழந்தோம் என்று எண்ணும்போது உள்ளம் வேதனை அடையத்தானே செய்யும். நண்பர் திரு.செங்கழனி முதலியார் அவர்கள் மறைந்தார். ஆனால் அவர் ஆற்றிய தூய பணி மறையவில்லை. குறுகிய காலத்தில் அவர் ஆற்றிய பணியை இல்லந்தோறும் நல்லவர் உள்ளந்தோறும் பாராட்டுவார்கள்.

அவர் பிரிவால் வாடும் அவர்தம் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் என் ஆழ்ந்த அனுதாபத்தைக் கூறுகிறேன். மலை மறைந்தது! என் செய்வது? குன்றுகள் மலையாகவேண்டுமென்று நம்மை நாமே தேற்றிக்கொள்ள வேண்டியதுதான். வாழ்க அவர் பணி! வாழ்க அவர் புகழ்!!

உயர்திரு. **வே.கு.பிரமீசன்** அவர்கள்

பிரசங்க சிகாமணி, காஞ்சிபுரம்.

அன்பின் வடிவினீர்! வணக்கம் பல.

தங்கள் கடிதம் கண்டேன், கவலை மிகுந்தது. அவர் பிரிவால்வாடும் அவர் குடும்பத்துடன் ஊர் பெருமக்களுடன் ஒன்றி துன்பில் பங்குகொள்ள எனக்கு வாய்ப்பியலாது போய்விட்டதை எண்ணி இன்னலுறுகிறேன். அவர் குறித்து எழுத என் கை நடுங்குகின்றது. அடக்கத்தின் வடிவம், அறிவின் கருவூலம், பக்தியின் உறைவிடம், பண்பின் சிகரம், கல்வி வளர்ச்சிக்கு உழைக்கும் உத்தமர். பிறர் மனம் புண்படா மொழியினர்.புலவரைப் போற்றும் பொற்பினர். தண்டமிழ்த் தெய்வம், தணிகை நாதனின் அறப்பணியியற்றி அழியாப் பெரும்புகழ் பெற்ற அண்ணல். ஆர்வத்துடன் அலைந்தும் பிறர் நலம் காணும் பெற்றியர். அப் பெருந்தகையாரைப் பிரிந்து தமிழ் நாட்டுக்கு பெரியதொரு நஷ்டம் எனக் கூறினால் மிகையாகாது. அவர் பிரிவினால் வருந்தும் அவர் குடும்பத்தினர்க்கு அடியேன் மிகவும் வருத்தமுடன் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவர் ஆன்மா சாந்தியடைக எனத் தணிகை நாதன் தாளிணைகளை ஏத்துகிறேன். பெருக்கத்து வேண்டும் மிகப் பணிவு என்பதற்கு அவரே சான்று.

****

செங்கழனிச் செம்மல்.

திரு. **V.S.சீனிவாச வரத அய்யங்கார்** அவர்கள்.

ஆசிரியர். கழக உயர்நிலைப்பள்ளி முன்னல்.

" நல்லார் குணங்கள் உரைப்பதுவும் நன்றே " என்றபடி இது எனக்குப் பெருமகிழ்ச்சி தருகிறது. கடவுள் பக்தியில் அதிக நம்பிக்கை கொண்டவர். முருகன் திருவருளைச் சதாகாலமும் நம்பி இருந்தவர். நாஸ்திகம் பேசும் கூட்டத்தைக் கண்டாலே " தீயாரைக் காண்பதுவும் தீதே " என்றபடி அவர்கள் பக்கம் போகவே அவருடைய மனம் இடம் கொடுக்காது.

பொதுப்பணி செய்வதில் அதிக பிரியமுள்ளவர் அவரிடம் சலியா உழைப்பும் திட சங்கல்பமும் குடிகொண்டிருந்தன. இத்துடன் சாந்தம் அவரிடத்தில் பூரணமாக நிலவி இருந்ததால் அவர் எடுத்த பொதுப்பணி வேலைகளை செய்ய முடிந்தது.

எல்லா தானத்தையும் விட கல்வி தானம் சிறந்தது. அவர் மின்னல் கிராமத்தில் ஓர் உயர்நிலைப்பள்ளி ஏற்படுத்தும் அரும்பாடு பட்டார். சதாகாலமும் அதற்காகவே உழைத்தார். அடிக்கடி அவர் என்னிடம் போடும்படியான முக்கிய கேள்வி எத்தனை பிள்ளைகள் பள்ளியில் படிக்கிறார்கள். அதற்கு நான் பதில் தெரிவித்ததும், இன்னும் அதிக பிள்ளைகள் பள்ளியில் சேர்ந்து படிக்கவேண்டும் என்று அவர் தம் விருப்பை கூறுவார். எல்லாரும் கல்வியின் பயனை அடைய வேண்டும். என்பது அவருடைய பேரவா. மனிதனைப் பூரண மனிதனாக்கும் கல்வியை எல்லாரும் பெறவேண்டும் என்ற அவருடைய எண்ணம், ஓர் பிரதி உபகாரத்தையும் விரும்பாமல் மழை பொழிந்து குடிகளுக்கு நன்மை ஏற்படுவது போலாகும். மின்னலை சார்ந்த ஏறக்குறைய முப்பது கிராமங்களுக்குக் கல்வி தானத்தை அளித்த பெரியார் திருவாளர் செங்கழனி முதலியார் பூத உடல் இவ்வுலகத்தை விட்டு நீத்தாலும், அவருடைய புகழ் இவ்வுலகம் அழியும் வரையிலும் பச்சையப்ப முதலியார் புகழ்போல என்றும் பிரகாசித்துக்கொண்டே இருக்கும் என்பதில் சிறிதும் சந்தேகம் இல்லை.

****

திரு. தி.அ.சண்முக முதலியார் அவர்கள்

பிரசாரகர், தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம், சென்னை.

அன்பார்ந்த ஐயா, வணக்கம்.

முன்னல் கிராமத்தில் பிரபல செங்குந்த குடும்பத்தில் தோன்றிய திரு.ப.முத்தப்ப முதலியார் அவர்களது அருமை மகன் திரு.ப.மு.செங்கழனி முதலியார் அவர்களை 1928-ஆம் ஆண்டு முதல் நன்கறிவேன். நான் செங்குந்த மித்திரன் சம்மந்தமாகப் பிரசாரம் செய்ய அடிக்கடி முன்னலுக்குப் போகும்போதெல்லாம், முதலியார் அவர்கள் இல்லத்தில் தான் தங்குவேன். செங்குந்தர் சம்மந்தமான இயக்கத்திற்குப் பேருதவி செய்து வந்தவர்கள். அவர்களது பணிவும், மக்களிடம் கொண்டுள்ள இரக்கமும், போற்றத்தக்கன.

அவர்கள் வட ஆற்காடு மாவட்ட உறுப்பினராக வந்து என்றும் தம்புகழ் நிலவி விளங்கத் தமது ஊரில் உயர்நிலைப் பள்ளியை நிறுவி அதற்காக வேண்டும் பொருள்களைச் செலவிட்டு, நிலைபெறச் செய்து வைத்தமையே அவரது ஆற்றல் விளங்குகின்றது. அப்படிப்பட்ட பெரியார் மண்ணுலகை நீத்து, விண்ணுலக கடைந்தமை கேட்டு மிகவும் வருத்தம் கொண்டோம். மேலும் அவர்கள் திருத்தணியில் தணிகைப் பெருமான் ஆலயத்தின் பின்புறக் கோபுரம் இயற்றித் தமது பக்தியை வெளிப்படுத்தியுள்ளார்கள்.

அவர்களது அரும்பெறல் தந்தையார் அவர்களும், இளவல்களும் மக்களும் மனைவியாரும் அவரது பிரிவால் மிகவும் வருந்தி இருப்பார்கள். இறையருள் அப்படியாயின் யாது செய்வோம், அவர்கள்தம் வருத்தத்தைவிட்டு நீங்கி, அவர்கள் விட்டுச் சென்ற கல்வி நிலையத்தை அவரது ஞாபகார்த்தமாக அதற்கு இன்னும் வேண்டிய பேருதவிகளைச் செய்து, அவருக்கு நன்றி செய்வார்களாக. அப்பெரியாரது ஆன்மா தணிகைநாதன் திருவடியில் சாந்தி பெற்று இலங்க வேலவனை வணங்குகின்றேன். எனது ஆழ்ந்த வருத்தத்தை அவரது குடும்பத்தினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

****

திரு. **E.S.தியாகராாசன்** அவர்கள்,

பஞ்சாயத்து போர்டு தலைவர், பொதட்டூர்பேட்டை.

நம்மிடையே யிருந்து மறைந்த செங்குந்தர் குலச் செம்மல் செங்கழனி முதலியாரவர்கள் இந்தப் பகுதியில் வாழ்மக்களுக்கும் குறிப்பாகச் செங்குந்த குலமக்களுக்கும் பெரிதும் தொண்டு செய்தவர்கள். மின்னலுக்குச் சுற்றுப் புறங்களில் உயர்தரப் பள்ளியின் தேவையை உணர்ந்து இடையறா உழைப்பால் "மின்னல் உயர்நிலைப்பள்ளியை" உருவாக்கித் தந்த உத்தமர். படிப்பின் உயர்வை உணர்ந்து படிக்க வசதியில்லாது வாழ்வைப் பாழாக்கி வந்த இளம் செல்வங்களுக்கு வாழ்வளித்த வள்ளல் செங்கழனியார் அவர்கள். அவர்களின் நாமம் பல தலைமுறைகள் படிக்கும் உள்ளங்களில் ஊன்றி நிற்கும்.

திரு. செங்கழனி முதலியாரவர்கள் தெய்வபக்தி மிக்கவர், அவர்களின் தெய்வத்திருப்பணிக்குச் சான்று திருத்தணிகை முருகன் கோயிலின் முதல் வாசற்படி. அவர்களின் இளவல்களும் அவருடன் ஒத்து வாழ்ந்து அன்னாரின் வாழ்வே நம் வாழ்வு என வாழ்கின்றவர்கள்.

அவர்கள் உள்ளங்கள் ஆறுதலடைய பல ஆண்டுகளாகும். அமைதியைத் தணிகை முருகன் அளிப்பாராக!

தணிகை முருகனின் தொண்டனாக வாழ்ந்து அவரின் கோயிலின் நிர்வாக சபை உறுப்பினராகத் தொண்டு புரிந்து செங்குந்த குலமக்களின் நிலையை உயர்த்திச் சென்ற செம்மல். அவர் நாமம் நீடூழி வாழ்க.

****

THE FATHER OF OUR INSTITUTION

Sri.A.Thirugnana Sambandam., B.A., B.T.,
Asst.B.H.S.,Munnal

It is the Saddest of all tales that I heard when the father of our institution sank into a profound slumbler. His premature death is an irrepairable and irrecoverable loss to us. Though he died yet his spirit is alive which will really promote the efficiency and safeguard the interests of our institution/

His meritorious service, his unstincted co-operation, his magnanimity and above all his love for our institution are inestimable. if he were to live for a few more years what a great boon it would have been for us. How ever his generation will continue his work as I firmly believe for ever. No doubt his name deserves to be written in golden letters on the pages of the history of this institution.

I pray God that his Soul may rest in heavenly peace.

****

திரு.V.S.குப்புசாமி பிள்ளை

A.M.I.H.Home Doctor.

சீர்மல்கு செங்கழனிச் செம்மலே!

நீவிர் இம்மாநிலத்தை விட்டு மறைந்தது என் கொலோ? நின் மறைவு நும் குடிக்கு மட்டுமின்றி இம்மாவட்டத்துக்கே பெருந்துயரும், ஈடுசெய்ய முடியாத பெரு நட்டத்தையும் விளைத்துள்ளது.

அருந்தவக் குன்றே!

நீராற்றிய அறங்கள் நும்புகழை என்றென்றும் விளக்கிக் கொண்டிருக்கும்: அன்னசத்திரம் ஆயிரம் நாட்டலினும், ஓர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் உயர்ந்தது என்ற பெரியோர்கள் கருத்தைப் பின்பற்றி உயர்நிலைப்பள்ளியை மின்னலில் திறக்கச் செய்த நும் செயற்கருஞ் செயல் மறக்க இயலாததாகும். இன்னும் இதுபோன்ற பல நல்ல செயல்களைச் செய்யவிடாமல் உம்மை ஆண்டவன் அழைத்துக்கொண்டான்.

நும் பிரிவால் வருந்தும் உம் குடும்பமும், மின்னல் பதியும் இன்னல் நீங்கி வாழவும், சைவம் சிறப்புறத் தொண்டாற்றிய நும் ஆவி என்றும் அழிவிலா இன்பத்தில் திளைக்கவும் எல்லாம் வல்ல முருகப்பெருமானை மன, மொழி மெய்களால் இறைஞ்சுகின்றேன்.

****

குல விளக்கு

திரு.**பா.பழனி** அவர்கள்

R.B.**பிரவீன்,** இந்தி மொழியாசிரியர், முன்னல்

உலகில் பல பெரியோர்கள் தோன்றி, தம் செயற் கருஞ்செயல்களால் மக்கள் மனத்தில் நிரந்தரமான இடம் பெற்று விடுகின்றனர். திருவாளர்.செங்கழனி முதலியார் அவர்கள் மேற்கூறிய பெரியோர்களில் ஒருவர் என்பதில் ஐயமில்லை. அவர் சாதாரண குடும்பத்தில் பிறந்து திறமையால் முன்னேறிய செங்குந்தகுலச் செம்மல் ஆவார்.

திருவாளர் முதலியார் அவர்க்ள இளைஞர்கள் முன்னேற வேண்டும் என்னும் நன்னோக்குடன் ஓர் உயர்நிலைப் பள்ளி திறந்து இப்போது அதன் தந்தையாக மாறிவிட்டார். அவர் பிள்ளைகளிடமும், அதில் தொண்டாற்றும் ஆசிரியர்களிடமும், நீங்கா அன்புடையவர். உலகில் பிறப்பும், இறப்பும் இயற்கை நிகழ்ச்சிகள், அவற்றையாரலும் மாற்றியமைக்க இயலாது. முதலியார் அவர்களுடைய ஆவல் மாணவர்கள் படித்து முன்னேற வேண்டும் என்பது. அதை மாணவர்கள் நிறைவேற்றுவதே அவருக்கு செய்யும் நன்றியாகும். தம் நலங் கருதாது உழைத்த அப்பெரியாரின் ஆவி இறைவன் இணையடியில் இரண்டறக் கலந்து இன்புற்றிருக்க இறைவனை வேண்டிக் கொள்கிறேன்.

****

மாணவர்கள் மறக்க முடியாத மாணிக்கம்

(ப.இராசகோபாலன், மின்னல்)

திரு.ப.மு.செங்கழனி முதலியார் அவர்களை மின்னல் வட்டாரத்துக்கு ஒரு கல்வித் தந்தை என்றால் அது மிகையாகாது. இந்த வட்டாரத்து மாணவர்கள் எட்டாம் வகுப்பை முடித்தவுடன் ஏக்கமடைவர். பெரும் பணக்கார மாணவரில் ஒரு சிலர் பெரிய நகரங்களுக்குச் சென்று படிப்பர். ஏனையோர் மேற்கொண்டு படிக்க இயலாது ஏங்குவர். அவர்கள் குறையை கண்ட முதலியார் அரும்பாடுபட்டு மின்னலில் உயர்நிலைப் பள்ளியை திறந்தது மாணவர் உலகுக்குச் செய்த ஒரு மறக்கமுடியாத சேவையாகும்.

அவர்போல் தன்நலங் கருதாமல் இத்தகைய தொண்டு செய்த பெரியோர்கள் இவரைப்போல் இன்னொருவர் இந்த வட்டாரத்திலேயே இன்றுவரைப் பிறந்ததில்லை. இனியும் பிறப்பது அருமை.

பெருநோக்கு

திரு.முதலியார் அவர்கள் வியாபார வேலையில் ஆழ்ந்திருக்கும் சமயத்திலும் மாணவர்கள் ஏதாவது தம்குறையைக் கூறுவதற்கு சென்றால். அவர் தம் வேலையை அப்படியே ஒதுக்கி வைத்துவிட்டு, மாணவர் குறையைக் கேட்பார். பண உதவியோ, அன்றி யாருக்காவது சிபாரிசு கடிதம் தரவேண்டி இருந்தால் உடனே எழுதிக் கொடுத்தோ தன்னை நாடி வந்த மாணவரை இன்முகத்துடன் திரும்பச் செய்வார் அத்தகைய பெருநோக்கும் அருள் உள்ளமும் கொண்ட பெரியார் மறைந்துவிட்டார். அவர் மறைவு மாணவர்களுக்கு ஈடு செய்யமுடியாத ஒரு இழப்பாகும்.

வீணைக்கு நாதம் : பாலுக்கு வெண்மை, தமிழுக்கு இனிமை: மின்னலுக்குச் செங்கழனி முதலியார். நாதம் இழந்த வீணைபோல், வெண்மை இழந்த பால்போல், செங்கழனி முதலியாரை இழந்த மின்னல் இன்று தவிக்கின்றது. அதைக் காட்டிலும் மாணவர் உலகம் பெரிதும் வருந்துகின்றது. இந்த வட்டார மாணவர்களுக்கு அவர் செயற்கருஞ் செயல் செய்து அதன் மூலம் தமபுகழை நிறுவிச் சென்றார். இந்த வட்டாரத்து மாணவர் அவர் செய்த உதவியை எக்காலத்திலும் மறக்க முடியாது. மாணவர்களால் மறக்க முடியாத அம்மாணிக்கம் பூதவுடல் இழப்பினும் புகழுடம்போல் பேரொளி விட்டுப் பிரகாசிக்கிறது.

வாழ்க! அவர் புகழ்! வளர்க உயர்நிலைப்பள்ளி!

****

மின்னல்

திரு. **ப.மு.செங்கழனி முதலியார்** அவர்கள்

மறைவு குறித்த

கையறு நிலை

நினைக்குங் காலை நெஞ்சநெக் குருகும்

எனைத்துச் செருக்கும் இம்மியுமில்லாக்

கனிந்த இன்முகம் குலவுசெங் கழனி

முதலியா ருயிரை முடித்த கூற்றம்

நனிபே தையே! நனிபே தையே!
பக்திப் பெருக்கால் ஏத்தும் அன்பர்
சித்தம் குளிர்ந்து சீவன் சிறந்து
முத்திப் பேற்றை முனைந்து கூடச்
சிற்பம் செறிக்கத் தணிகைக் குன்றில்
பொற்புடைக் கோபுரம் பொலியச் சமைத்தனன்:
எண்ணான் கறத்தினுள் இணையில் அறமாம்
எண்ணும் எழுத்தும் இயம்பிடலென்றே
இன்னல் பலவும் மின்னி யுறினும்
திண்ணிய உளத்தால் திடமுற்றிடவே
பண்ணிய புண்ணியம் பொள்ளெனத் தெரிக்கும்
கல்விக் கூடம் கவினுறுத் தோற்றினன்:
யாண்டுச் செலினுமெவ் வாசான் காணினும்
ஈண்டெம் பள்ளி எந்நிலை யிற்றெனத்
தலைமை யாசான் தகவுடை மாணவர்
நிலையினை உசாவும் நீர் மைய னந்தோ!
இன்றே செலினும் உதவுமே நன்று:
முன்னே உதவினம் என்னா துள்ளம்
முதனாள் போன்ற முகவிருப் பெய்துவன்:
இனைய னென்னா தித்தக் கோனை
நினையாக் கூற்றம் இன்னுயிர் குடித்தது
நினைக்குங் காலை நெஞ்சுநெக் குருகும்!
ஐய!
ஆசான் குறைதீர் அமைவுடைப் பண்பினை
ஏகாச் சிறப்பினை எவர்பால் காண்போம்!
கூசா தீந்த, கோதில் மாணவர்
குறையுடைக் கட்டணம் நிறைநாள் என்றோ?
சிந்தை கனியும் தந்தை மொழியை
மைந்தரும் மகவும் மனைவாழ் கிழத்தியும்
தம்பியர் தாமும் என்றே கேட்பர்!

தீவளி யதனால் தீங்காய் உதிர்தலும்
உண்டென உலகில் உன்னுதல் அமையும்
இயற்றிய நல்லற மினிதின் இயங்க
வியத்தகு தணிகை வேலவன் பதம்நின்
ஆருயிர் அமைதி ஆழ்ந்திடச்
சீருடை யவனடி சிறக்கவாழ்த் துவமே

இங்ஙனம்

மறைவு குறித்தழுங்கும்.

முன்னல் **ஆசிரியர் குழுவினர்.**

30-01-1958 கழக உயர்நிலைப்பள்ளி.

****

N.V.சுகவனன், I.A.S.(Retd)

தியாகராய நகர்.

எனது நண்பர் திரு.செங்கழனி முதலியார் அவர்கள் 20.01.1958 இரவு காலஞ்சென்றார் என்பதை கேட்டதும் நானும் என் மனைவியும் மிகத் துயரமுற்றோம். நான் வட ஆற்காடு ஜில்லாவில் கலெக்டராக இருந்த பொழுது அவருடைய ஸ்நேகம் நேரிட்டது. அது நாளது வரை நன்கு வளர்ந்து வந்தது. ஆகையால் அவர் நம்முடைய மத்தியிலிருந்து மறைந்தது மிக மிக துயரத்தை உண்டு பண்ணுகிறது.

கடவுள் பக்தி நிறைந்த நல்ல சிநேகிதர். டிஸ்டிரிக்ட் போர்டு மெம்பர் ஸ்தானத்தில் திறமையுடனும் நேர்மையாகவும் இருந்தது பற்றி எனக்கு அவர் மேல் விசேஷ அன்பு உண்டு. திருத்தணியில் எனக்கும் எங்கள் குடும்பத்தாருக்கும் முருகனின் திவ்ய தரிசனம் பெற உதவி புரிந்ததை எப்போதும் மறக்க முடியாது. அது போலவே முன்னல் உயர்நிலைப் பள்ளிக்கு அவர் எடுத்துக்கொண்ட ஊக்கத்தை நீங்கள் என்றும் மறக்க முடியாது.

முக்கியமாக எனது தலைசிறந்த நண்பர்களில் ஒருவர் பூர்ண வயது வருவதற்குள் மறைந்ததை என்றும் மறவேன். அவர் குடும்பத்தார் அனைவருக்கும் என் மனப்பூர்வமான அனுதாபம் உரித்தாகுக.

****

M.P.நாச்சிமுத்து,B.A.,B.L.,

ஈரோடு

திருவாளர் முத்தப்ப முதலியார் அவர்களுக்கு,

வணக்கம், தங்கள் மூத்த மகனின் ஈமக்கடன் அழைப்பிதழ் பெற்றதும் அதிக வருத்தம் அடைந்தேன். நாளது 02-02-1958-ல் நடக்கும் இறுதிச் சடங்கிற்கு வர இயலாததைப்பற்றி வருந்துகிறேன். அவருடைய ஆன்மா சாந்தியடைவதாக.

****

K.A.சண்முக முதலியார்

மானேஜிங் டைரக்டர், திருமகள் மில்ஸ் லிமிடெட்

குடியாத்தம்

மின்னல் கலைவாணிபர் திருவாளர் தவச்செல்வர் பட்டு முத்தப்ப முதலியார் அவர்களின் திருமகனார் ப.மு.செங்கழனி முதலியாரை நினைக்கும் போது மகன் தந்தைக் காற்றும் உதவி இவன் தந்தை என்னோற்றான் கொல்லென்னும் சொல்

பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்

நயனுடை யான்கட் படின்

என்னும் மறைமொழிகள் நினைவிற்கு வருகின்றன மக்களுக்கு உதவும் மன மாண்பு உடையோர் யாவருக்கும் இந் நினைவு மலர் உணர்ச்சிப் பயன் தருவதாக

திருவாளர் ப.மு.செஙகழனி முதலியார் நினைவு மலர் குழுவினருக்கு வணக்கம், நலம் 12-ஆண்டுகளாக தொடர்பின்மையால் விரிவாக எழுத விபரம் தெரியவில்லை சுருக்கமாக எழுதியதை பெற்றுக்கொள்வீர்கள்.

****

V.S.SESHADRI

Headmaster

Board High School, Kilkodungalore

அன்புடையீர்,

உயர்திரு.ப.மு.செங்கழனி முதலியார் அவர்கள் 20.01.1958 அன்று இறைவனடி அடைந்த செய்தியைக் கேட்டுத் திடுக்கிட்டேன். எனது ஆழ்ந்த வருத்தத்தையும் அனுதாபத்தையும் அவர் பெற்றோர்கட்கும் குடும்பத்துக்கும் அறிவித்துக்கொள்கிறேன்.

அன்னார் முன்னல் கிராம செங்குந்தர் மரபில் ஒரு திலகமாக விளங்கினவர்.

அவருடைய தனி முயற்சி, தாராள கொடை மனப்பான்மையின் விளைவே இன்று நிலவியிருக்கும் முன்னல் கழக உயர்நிலைப் பள்ளியாகும். சுமார் லட்சம் ரூபாய் மதிப்புள்ளதும் மாணவர்கட்குப் போதிய வசதிகளை அளிக்கக்கூடியதுமான தற்போதுள்ள உயர்நிலைப் பள்ளியின் கட்டிடம் அவர் உழைப்பின் பலனாகும்.

அவர் நோய்வாய்ப் பட்டிருக்கும் காலத்திலும், பள்ளியின் முற்போக்கில் மிகவும் கவனம் காட்டி வந்தார். அப்பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்களுக்குக் குடியிருக்க விடுதிகள் அமைத்துத் தரவும் அவர் மனதில் திட்டமிட்டுக் கொண்டிருந்ததாக எனக்குத் தெரியவந்தது. அதை நிறைவேற்றும் வாய்ப்பு இல்லாதது ஆசிரியர்களின் துரதிஷ்டமேயாகும். அன்னாரின் மறைவு குறிப்பாக அவ்வூர் மக்கட்கும் பொதுவாக நாட்டுக்கும் ஈடு செய்ய முடியாத தொன்றேயாகும், அவருடைய ஆன்மா சாந்தியடையுமாக.

****

S.R.சுப்பிரமணியம்

நிர்வாக கூட்டாளர்

Tirupur Cotton Spinning & Weaving Mills Limited, Tirupur

உயர்திரு. பட்டு முத்தப்ப முதலியார் அவர்களுக்கு வணக்கமாய் எழுதியது. இன்று தான் நான் பம்பாயில் 1½ மாதமாக இருந்து விட்டு வந்தேன். எனது உறுதுணை நண்பரும், பெருந்தகையும், பரோபகாரியும் நற்பண்புகள் வாய்ந்த நனி தமிழ் மகன், தமிழ்த்தாயின் அரூந்தவப் புதல்வன் ப.மு.செங்கழனி முதலியார் இயற்கை எய்தினார் என்று கேட்டு என்மனம் ஆறாத்துயரின் ஆழ்ந்தது. தங்கள் குமாரர்கள் முருகேச முதலியாருக்கும், மாணிக்க முதலியாருக்கும் தங்கள் குடும்பத்தாருக்கும் என் இதயபூர்வமான இரங்கல் கூறுகின்றேன். துயரத்தில் ஆழ்ந்துள்ள முன்னல் மக்களோடு நானும் பங்கு கொள்ளுகிறேன்.

****

கிருபானந்தவாரி

சுங்குரும்பை

அன்புடையீர், ஆர்வலரீர்,

வணக்கம், நலம் தங்கள் முதல் கடிதமும், அடுத்த கடிதமும் வந்தன, அண்ணாவுடைய பிரிவைக் குறித்து நான் பெரிதும் வருந்துகின்றேன். உத்தமமான குணம் படைத்தவர், எத்தனை பொதுக்காரியங்களில் ஈடுப்பட்டவர், நமது ஊரில் புதுக்கிய கல்விக் சாலை ஒன்றே சான்று பகரும். அதுவும் திருத்தணி கோபுரமும் உள்ளவரை அண்ணாருடைய புகழ் நிலை நிற்கும். சஷ்டியின் போது பார்த்தேன். மறுபடியும் பார்க்க இயலாமல் போய் விட்டது. நான் கடல் கடந்து 2500 மைல்களுக்கு அப்பால் இருக்கின்றேன். அதனால் நேரில் ஆறுதல் கூற இயலவில்லை, நமது குடும்பத்தார் அனைவருக்கும் ஆழ்ந்த எனது அனுதாபத்தை அறிவிக்கின்றேன். கார்த்திகை 4-ம் தேதி இங்கு வந்தேன். மலாயா நாடு முழுவதும் சுற்றி சைவ வான்பயிர் புரிந்துகொண்டிருக்கின்றேன். தங்கள் மனதைத் திடப்படுத்திக் கொள்ளுமாறு வேண்டுகிறேன். அன்னாருடைய ஆன்மா சாந்தியடையுமாறு எம்பெருமானை வேண்டுகின்றேன். மார்ச் 29 தேதி விமான மூலம் சென்னை வர உத்தேசம். பங்குனி இறுதியில் வள்ளிமலையில் நிகழும் திருப்படி விழாவில் கலந்துக்கொள்ளுமாறு வேண்டுகிறேன். முருகன் கருணை தங்கட்கு எல்லா நலன்களையும் அருளுக,

இரங்கற்பா

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

1. புகழ்மிகு மின்னல் வந்த பூபனே! கல்விச்சாலை
திகழுறச் செய்த கீர்த்திச் செங்கழுநீர்ம கீபா!
குகனுறை தணிகைதன்னில் கோபுரம் புரிந்த கோவே!
தகவுடன் தணிகை நாதன் தாமரைத்தாள் சார்ந் தாயே.

2. உத்தம குணங்கட் கெல்லாம் உறைவிடமாக வாழ்ந்தாய்
பத்தியாய் தேசத் தொண்டு பரிவுடன் இனிது செய்தாய்
முத்தமிழ் வளர்த்தாய் எந்தை முருகனைப் பரவி நின்றாய்
அத்தலந் தனிலும் நல்தொண்டு ஆற்றிட அகன்றாய் கொல்லோ!

3. என்றுநின் கருணைபூத்த எழில்முகங் காண்போம் அந்தோ!
என்றுநின் இன்சொல் கேட்போம்? எமைப் பிரிந்தகன்ற கோவே
என்றுநின் குணங்கள் தம்மை எண்ணியே வாழ்த்துகின்றோம்
என்றும் நீ முருகன் தாளில் இன்புற்று வாழி வாழி!

****

கு.சி.நரசிம்மன்

மதராஸ்

அன்புடையீர்,


அண்ணா அவர்களின் மறைவு பற்றி தலைமை ஆசிரியரின் அஞ்சல் மூலமாக அறிந்து ஆற்றொண துயரம் அடைந்தேன். நம் சமூகத்திற்கே திலகமாக விளங்கி, கல்விக்கு அரும்பணி செய்து அவருடைய ஞாபகம் எப்பொழுதும் நிலவும்படி செய்த பெரியார் அவருடைய பூத உடல் மறைந்தாலும் அவருடைய புகழ் உடம்பு என்றும் மறவாமல் செய்திருக்கிறார். கடவுள் அவரை இன்னும் பல ஆண்டுகள் இருந்து இன்னும் தொண்டுகள் செய்ய முடியாமல் செய்து விட்டார், எல்லாம் அவன் செயல்.

முதல் பதிப்பு : 1958
இரண்டாம் பதிப்பு : 2020

ஜிகே டிஜிட்டல் நெ.19, இரயில்வே போலீஸ் லைன் தெரு,
அரக்கோணம். செல் : 9443642430



பள்ளி முகப்பில் உள்ள முதலியார் படம்



திரு. முதலியார் அவர்கள் தணிகையில் கட்டுவித்த கோபுரம்



மின்னல் உயர்நிலைப்பள்ளி கட்டிடம்